# 05-01-2025 செய்தி

## 2024–ஆம் ஆண்டு தமிழகத்தில் நிகழ்ந்த பிறப்புகள்

| மாவட்டங்கள் | மொத்தம் | ஆண் | பெண் | மூன்றாம் பாலினம் |
|---|---|---|---|---|
| அரியலூர் | 8,592 | 4,494 | 4,097 | 1 |
| செங்கல்பட்டு | 30,121 | 15,431 | 14,690 | 0 |
| சென்னை | 90,442 | 46,069 | 44,372 | 1 |
| கோவை | 44,257 | 22,581 | 21,673 | 3 |
| கடலூர் | 24,176 | 12,548 | 11,626 | 2 |
| தர்மபுரி | 24,241 | 12,784 | 11,454 | 3 |
| திண்டுக்கல் | 23,636 | 12,285 | 11,349 | 2 |
| ஈரோடு | 24,874 | 12,768 | 12,106 | 0 |
| கள்ளகுறிச்சி | 16,309 | 8,533 | 7,774 | 2 |
| காஞ்சிபுரம் | 10,735 | 5,525 | 5,210 | 0 |
| கன்னியாகுமரி | 20,219 | 10,328 | 9,891 | 0 |
| கரூர் | 12,450 | 6,479 | 5,971 | 0 |
| கிருஷ்ணகிரி | 23,231 | 11,995 | 11,235 | 1 |
| மதுரை | 42,039 | 21,668 | 20,370 | 1 |
| மயிலாடுதுறை | 9,283 | 4,717 | 4,566 | 0 |
| நாகப்பட்டினம் | 5,325 | 2,735 | 2,590 | 0 |
| நாமக்கல் | 16,384 | 8,456 | 7,928 | 0 |
| பெரம்பலூர் | 8,058 | 4,253 | 3,805 | 0 |
| புதுக்கோட்டை | 16,283 | 8,549 | 7,734 | 0 |
| ராமநாதபுரம் | 14,536 | 7,500 | 7,036 | 0 |
| ராணிப்பேட்டை | 6,716 | 3,493 | 3,222 | 1 |
| சேலம் | 43,505 | 22,848 | 20,656 | 1 |
| சிவகங்கை | 14,696 | 7,602 | 7,094 | 0 |
| தென்காசி | 15,363 | 7,794 | 7,569 | 0 |
| தஞ்சை | 35,135 | 18,036 | 17,097 | 2 |
| நீலகிரி | 4,946 | 2,456 | 2,489 | 1 |
| தேனி | 14,843 | 7,678 | 7,165 | 0 |
| திருவள்ளூர் | 20,261 | 10,501 | 9,758 | 2 |
| திருவாரூர் | 10,848 | 5,640 | 5,208 | 0 |
| தூத்துக்குடி | 20,832 | 10,640 | 10,192 | 0 |
| திருச்சி | 37,671 | 19,431 | 18,238 | 2 |
| நெல்லை | 23,424 | 11,908 | 11,513 | 3 |
| திருப்பத்தூர் | 14,078 | 7,284 | 6,793 | 1 |
| திருப்பூர் | 21,143 | 10,883 | 10,260 | 0 |
| திருவண்ணாமலை | 21,551 | 11,308 | 10,243 | 0 |
| வேலூர் | 33,980 | 17,787 | 16,186 | 7 |
| விழுப்புரம் | 12,624 | 6,613 | 6,009 | 2 |
| விருதுநகர் | 25,014 | 12,755 | 12,257 | 2 |
| மொத்தம் | 8,41,821 | 4,34,355 | 4,07,426 | 40 |

SURESH'

**தமிழ்நாட்டில் கடந்த 6 ஆண்டுகளில் பிறப்பு விகிதம் குறைந்தது**

**11 சதவீதம் சரிவு**

- தமிழ்நாட்டில் 6 ஆண்டுகளில் குழந்தை பிறப்பு 11 சதவீதம் குறைந்துள்ளது. கடந்த ஆண்டில் 8% லட்சம் குழந்தைகள் பிறந்துள்ளன.
- இந்தியாவின் மக்கள் தொகை 2011-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 121 கோடியாக இருந்தது.

**தமிழ்நாட்டின் மக்கள்தொகை**

- தமிழ்நாட்டில் 7 கோடியே 21 லட்சம் பேர் இருந்தனர். தேசிய அளவில் மக்கள் தொகையில் தமிழகம் 7-வது இடத்தில் உள்ளது.
- நாட்டின் சராசரி மக்கள் தொகை வளர்ச்சி 0.92 சதவீதமாக உள்ளது என ஐ.நா சபை மற்றும் உலக வங்கி, இந்திய சுகாதாரத்துறை ஆகியவை கணித்து உள்ளது.
- ஆனால் தேசிய சராசரியை விட நாட்டிலேயே அதிக அளவாக பீகாரில் 1.98 சதவீதமும், உத்தரபிரதேசத்தில் 1.70-ம் மேகாலயாவில் 1.5-ம், மத்திய பிரதேசத்தில் 1.49 சதவீதமும் மக்கள் தொகை வளர்ச்சி உள்ளது.
- பொருளாதார வளர்ச்சியில் முன்னணியில் இருக்கும் மகாராஷ்டிராவில் 0.71 சதவீதமும், மேற்கு வங்காளத்தில் 0.78 சதவீதமும் மக்கள் தொகை வளர்ச்சி இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

**அதிர்ச்சி**

- அதேநேரம் தென் மாநிலங்களான கேரளாவில் 0.22-ம் ஆந்திராவில் 0.61 சதவீதமும், கர்நாடகாவில் 0.68 சதவீதமும், தெலுங்கானாவில் 0.74 சதவீதமாகவும் இருக்கிறது.
- ஆனால் தமிழகத்தில் 0.30 சதவீதம் மட்டுமே மக்கள் தொகை வளர்ச்சி இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.
- தேசிய சராசரியை விட இது மிக குறைந்த அளவாக இருக்கிறது.
- இருப்பினும் இந்த சதவீதம் இன்னும் குறைவாகவே இருக்கும் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.
- 2019-ம் ஆண்டு முதல் தமிழகத்தில் பிறப்பு விகிதம் அதிர்ச்சியூட்டும் வகையில் சரிவடைந்து கொண்டே செல்கிறது.
- 2019-ம் ஆண்டில் தமிழகத்தில் 9 லட்சத்து 45 ஆயிரத்து 701 குழந்தைகள் பிறந்துள்ளனர்.
- 2020-ம் ஆண்டு 9 லட்சத்து 39 ஆயிரத்து 783-ம், 2021-ம் ஆண்டில் 9 லட்சத்து 12 ஆயிரத்து 864-ம், 2022-ம் ஆண்டில் 9 லட்சத்து 36 ஆயிரத்து 367-ம், 2023-ம் ஆண்டு 9 லட்சத்து 2 ஆயிரத்து 306-ம் உள்ளது.

**பெரும் வீழ்ச்சி**

- ஆனால் இதுவரை இல்லாத அளவாக 2024-ம் ஆண்டில் 8 லட்சத்து 41 ஆயிரத்து 821 குழந்தைகள் மட்டுமே பிறந்து உள்ளனர்.
- இது முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு மிக குறைந்த அளவாகும். அதோடு குழந்தைகள் பிறப்பில் தமிழகம் மிகப்பெரும் வீழ்ச்சியை சந்தித்து இருப்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது.
- அதன்படி 2019-ம் ஆண்டுடன், 2024-ம் ஆண்டினை ஒப்பிட்டால் 1 லட்சத்து 3 ஆயிரத்து 880 குழந்தைகள் பிறப்பு குறைந்துள்ளது. இது 11 சதவீத சரிவு ஆகும்.
- அதேவேளையில் 2024-ம் ஆண்டினை 2023-ம் ஆண்டுடன் ஒப்பிட்டால் 60 ஆயிரத்து 485 குழந்தை பிறப்புகள் குறைந்துள்ளது. இது 6.71 சதவீத சரிவு ஆகும்.

**குழந்தை பிறப்பு....**

**மாற்றங்கள்**

- இது குறித்து அதிகாரி ஒருவர் கூறும் போது, தமிழகத்தில் பிறப்பு விகிதம் குறைந்து வருவது உண்மை தான்.
- 2024-ம் ஆண்டில் 8 லட்சத்து 41 ஆயிரத்து 821 குழந்தைகள் பிறப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.
- பொதுவாக ஆஸ்பத்திரிகளில் பிறப்பை பதிவு செய்ய 10 நாட்கள் வரை எடுத்து கொள்வார்கள். எனவே தற்போதைய கணக்கின் அடிப்படையில் இன்னும் சில குழந்தைகள் அதில் பதிவாவதற்கு வாய்ப்புகள் உள்ளது. அதிகபட்சமாக இன்னும் சுமார் 12 ஆயிரம் குழந்தைகள் வரை இதில் சேரலாம். எனவே இறுதி பட்டியலில் சில மாற்றங்கள் இருந்தாலும், முந்தைய ஆண்டுகளை ஒப்பிட்டால் 2024-ஆம் குழந்தைகள் பிறப்பு குறைவு தான் என்றார்.

**தமிழகத்திற்கு லாபமா? நஷ்டமா?**

- குழந்தை பிறப்பு குறைந்தால் மக்கள் தொகை வளர்ச்சி குறை யும். அதனால் கல்வி, சுகாதாரம் மற்றும் பிற சேவைகளின் சரியான பங்கீடு கிடைக்கும். சிறிய குடும்பங்களால் உயர்ந்த வாழ்க்கை தரம் ஏற்படும்.
- பெண்களின் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகள் அதிகரிக்கும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு காரணமாக வளங்கள் மீதான அழுத்தம் குறைவாக இருக்கும்.
- சுகாதார மேம்பாடு ஏற்பட்டு தாய் மற்றும் குழந்தை இறப்பு விகிதம் குறைவாக இருக்கும்.
- நஷ்டம் என்று பார்த்தால் மக்கள்தொகை அடிப்படையில் தமிழகத்தின் நாடாளுமன்ற தொகுதிகள் குறைய வாய்ப்பு இருக்கிறது.
- மத்திய அரசு, மக்கள் தொகையில் அடிப்படையில் தான் நிதி ஒதுக்குகிறது. குறைந்த மக்கள் தொகையாக இருந்தால் குறைந்தளவு தான் நிதி கிடைக்கும்.

- மூத்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். தொழிலாளர்கள் பற்றாக்குறையால் உற்பத்தி திறன் பாதிக்கும். குடும்பத்தில் ஒரே குழந்தை இருப்பதால் அழுத்தம் அதிகரிக்கும்.

**பிறப்பு விகிதம் ஏன் குறைகிறது?**

- தமிழகத்தில் பிறப்பு விகிதம் குறைந்ததற்கான முக்கிய கார ணங்கள் வருமாறு:–
- தமிழக அரசு, குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது. இதனால் தம்பதிகளிடையே நாம் இருவர், நமக்கு ஒருவர் என்ற எண்ணம் மேலோங்கி உள்ளது.
- பெண்களுக்கான கல்வி வளர்ச்சி மற்றும் குடும்ப வளர்ச்சியின் மீது அதிக விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.
- திருமண வயது அதிகரிப்பு காரணமாக, பெண்களின் குழந்தை பெற்றெடுக்கும் காலம் குறைந்துள்ளது.
- நவீன வாழ்க்கை முறைகள் காரணமாக சிறிய குடும்பங்களை தான் அதிகம் விரும்புகிறார்கள். எனவே ஒரு குழந்தை மட்டுமே பெற்று கொள்ளும் தம்பதிகளின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது.
- பெண்களின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் அடைந்துள்ளது. பெண்கள் வேலை வாய்ப்பின் மேம்பாடு காரணமாக குழந்தைகள் வளர்ப்பதற்கான நேரத்தை கட் டுப்படுத்தி உள்ளது.
- குழந்தை பிறப்பை கட்டுப்படுத்துவதற்கான சாதனங்கள் குறித்த விழிப்புணர்வும், பயன்பாடும் அதிகரித்துள்ளது.

## ஆர். சிதம்பரம் மறைவு;

- 1974–ஆம் ஆண்டு நடைபெற்ற நாட்டின் முதல் அணு குண்டு சோதனையில் (ராஜஸ்தான் மாநிலம் பொக்ரானில் நடைபெற்றது) அவர் முக்கிய பங்கு வகித்தார்.
- 1998–ஆம் ஆண்டு பொக்ரானில் நடைபெற்ற இரண்டாவது அணுகுண்டு சோதனையின் போது, அவர் தலைமையில் அணு சக்தி துறைக்குழு செயல்பட்டது.

**சென்னையில் பிறந்தவர்**

- 1936–ஆம் ஆண்டு நவம்பர் 12–ஆம் தேதி சென்னையில் பிறந்த அவர், உத்தர பிரதேச மாநிலம் மீரட்டில் தொடக்கக் கல்வி பயின்றார்.
- 8–ஆம் வகுப்பு முதல் சென்னை மயிலாப்பூரில் உள்ள பி.எஸ். உயர்நிலைப் பள்ளியில் படித்தார்.
- அதன் பின்னர் சென்னை மாநிலக் கல்லூரியில் இளநிலைப் பட்டப்படிப்பை மேற்கொண்ட அவர், பெங்களூரின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தின் முதுநிலைப் பட்டப்படிப்பை மேற்கொண்டார்.

## அம்பேத்கர் விருது– து. ரவிக்குமார் பெரியார் விருது– விடுதலை ராஜேந்திரன்

- 2025–ஆம் ஆண்டுக்கான திருவள்ளூர் விருது – புலவர் மு. படிக்கராமுவுக்கு வழங்கப்பட உள்ளது.
- 2024–ஆம் ஆண்டுக்கான அண்ணா விருது–மூத்த தலைவர் எல்.கணேசன் பாரதியார் விருது – அரசியல் கவிஞரும் பாடலாசிரியருமான கபிலன், பாரதிதாசன் விருது– கவிஞர் செல்வகணபதி, திரு.வி.க விருது எழுத்தாளரும் மருத்துவருமான ஜி.ஆர்.ரவீந்திரநாத், கி.ஆ.பெ.விசுவநாதம் விருது எழுத்தாளர் வே.மு.பொதிய வெற்பன் ஆகியோருக்கு வழங்கப்பட உள்ளது.
- விருதாளர்களுக்கு விருதுத் தொகையாக தலா ரூ.2 லட்சம் ஒரு பவுன் தங்கப்பதக்கம், தகுதியுரையும் வழங்கி பொன்னாடை அணிவித்து சிறப்பிக்கப் பெறுவர்.
- 2024–ஆம் ஆண்டுக்கான பெரியார் விருது– திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச் செயலர் விடுதலை ராஜேந்திரன், அம்பேத்கர் விருது– விடுதலைச் சிறுத்தைகள் கட்சிப் பொதுச் செயலர் து. ரவிக்குமார் ஆகியோருக்கும் வழங்கப்பட உள்ளது.
- இந்த விருதாளர்களுக்கு விருதுத் தொகையாக தலா ரூ. 5 லட்சம், ஒரு பவுன் தங்கப் பதக்கம் தகுதியுரை வழங்கி பொன்னாடை அணிவித்தும் சிறப்பிக்கப் பெறுவர்.
- கலைஞர் விருது– கருணாநிதியிடம் சிறப்பு உதவியாளராகப் பணியாற்றியவரும் எழுத்தாளருமான முத்து வாவாசிக்கு வழங்கப்பட உள்ளது.
- விருதாளருக்கு ரூ.10 லட்சம் ஒரு பவுன் தங்கப்பதக்கம், தகுதியுரை வழங்கி பொன்னாடை அணிவித்து சிறப்பிக்கப் பெறுவர்.

## புயல் எப்படி உருவாகிறது?

- ஒரு குழந்தை எப்படி படிப்படியாக வளர்கிறதோ அதேபோல தான் புயலும் படிப்படியாக வளர்கிறது. இந்த வளர்ச்சி 3 படி நிலைகளாக பிரிக்கப்படுகிறது.

  1. காற்றழுத்த தாழ்வு பகுதி
  2. காற்றழுத்த தாழ்வு மண்டலம்
  3. ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம்

- இந்த நிலைகளை கடந்த பின்பு வலுப்பெற்று புயல் உருவாகிறது. அப்படி புயலாக வலுப்பெறும்போது அதற்கு ஒரு பெயர் சூட்டப்படுகிறது.

**புயலுக்கு பெயர் வைத்த வரலாறு**

- 19-ம்நூற்றாண்டில், வானிலை விஞ்ஞானிகள் மற்றும் ஆய்வாளர்கள் புயல்களுக்கு தன்னிச்சையாக பெயர் சூட்டி வந்தனர். அப்போது அரசியல்வாதிகள் உள்பட தங்களுக்கு பிடிக்காதவர்களின் பெயர்களை சூட்டியதாக சர்ச்சை நிலவியது. பிரிட்டனை சேர்ந்த வானியல் விஞ்ஞானி கிளெமெண்ட் ராக் என்பவர் தான் புயல்களுக்கு பெயர் சூட்டும் வழக்கத்தை தொடங்கினார்.
- இவர் முதலில் பிரிட்டனிலும், பின்னர் ஆஸ்திரேலியாவிலும் வானிலையில் ஏற்படும் மாற்றங்களை, கருவிகளின் மூலமாக தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்து வந்துள்ளார். முதலில் கிரேக்க எழுத்துக்களை கொண்ட பெயர்களையும், கிரேக்க புராணங்களில் காணப்படும் பெயர்களையும் அவர் புயல்களுக்கு சூட்டியதாக கூறப்படுகிறது.

**எப்படிப்பட்ட பெயர்களை வைக்கக் கூடாது?**

- நாடுகள் பரிந்துரைக்கும் புயலின் பெயர்களுக்கு சில நிபந்தனைகள் உள்ளன.
- புயலின் பெயரில் எந்தவித அரசியல் சார்ந்த பெயர்கள், கலாசாரம், மத நம்பிக்கை, இனம் போன்றவை பிரதிபலிக்கக்கூடாது. தனித்துவமாகவும் நடுநிலையாகவும் பெயர் இருக்க வேண்டும்.
- உலகளவில் வாழும் மக்களின் உணர்வுகளை காயப்படுத்தும்படி பெயர்கள் இருக்கக் கூடாது.
- புயலின் பெயர் சிறியதாகவும், உச்சரிக்க எளிதாகவும் இருக்க வேண்டும்.
- பெயரின் அளவு 8 எழுத்துக்களுக்கு மேல் இருக்கக் கூடாது.
- பரிந்துரைக்கப்படும் பெயரை நிராகரிக்க 13 நாடுகளின் வானிலை ஆய்வுக் குழுவுக்கு உரிமை உண்டு.
- ஒருமுறை பயன்படுத்தப்பட்ட பெயரை மீண்டும் வைக்கக் கூடாது.

**ஏன் புயலுக்கு பெயர் வைக்கப்படுகிறது?**

- பூமியின் பல்வேறு இடங்களில் ஒரே நேரத்தில் பல புயல்கள் உருவாகக்கூடும்.அப்படி உருவாகும் வெவ்வேறு புயல்களை அறியவும், அவற்றை வேறுபடுத்திக்காட்டவும் புயல்களுக்கு பெயர் வைக்கும் நடைமுறை வந்ததாக அறியப்படுகிறது.
- உலக வானிலை அமைப்பு 1950-ம் ஆண்டு வானிலை குறித்த ஆய்வுகளுக்காக உருவாக்கப்பட்டது. இதில் உள்ள நாடுகள் ஆறு மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. இந்த மண்டலங்களுக்கு தான் புயலுக்கு பெயர் வைக்கும் அதிகாரம் இருக்கிறது.
- 2000-ம் ஆண்டு முதல் உலக வானிலை அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகளின் ஆசிய பசிபிக் பொருளாதார மற்றும் சமூக ஆணையம் ஆகியவை மூலம் புயல்களுக்கு பெயர்கள் வழங்கப்பட்டன.
- இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், மாலத்தீவு, மியான்மர், ஓமன் மற்றும் தாய்லாந்து ஆகிய 8 நாடுகள் உறுப்பினர்களாக இருந்தன. இந்த 8 நாடுகள் ஒன்று சேர்ந்து 64 பெயர்களை கொண்ட புயல் பட்டியலை தயாரித்தன.
- அவற்றின் அடிப்படையில் புயலுக்கான பெயர்கள் சுழற்சி முறையில் வைக்கப்பட்டு வந்தன.
- 2004-ம் ஆண்டு முதல் வங்கக்கடலில் உருவாகும் புயல் களுக்கு பெயர்கள் சூட்டப்பட்டு வருகின்றன. 2018-ம் ஆண்டு முதல் ஈரான், கத்தார், சவூதி அரேபியா, ஐக்கிய, அரபு எமிரேட்ஸ் மற்றும் ஏமன் ஆகிய நாடுகள் புயலுக்கான பெயர்களை தயாரிக்கும் பட்டியலில் சேர்க்கப்பட்டன.
- அதன் பிறகு உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் 13 பெயர்களை பரிந்துரைத்தன. அதன்பேரில் 169 பெயர்கள் கொண்ட பட்டியல் தயாராகின. இதை வைத்துதான் இந்தியாவில் உருவாகும் புயல்களுக்கு அடுத்தடுத்து பெயர்கள் வைக்கப்படுகின்றன.

## வயதான பிறகு பிள்ளைகள் கவனிக்காவிட்டால் பெற்றோர் வழங்கிய சொத்துகளின் தான பத்திரத்தை ரத்து செய்யலாம்

- மத்திய பிரதேச மாநிலத்தை சேர்ந்த வயதான பெண் ஒருவரை, அவரது மகன் சரியாக கவனிக்கவில்லை.
- இதையடுத்து, மகனுக்கு வழங்கிய சொத்தை மீட்டுத் தர வேண்டும்.
- அந்த சொத்துகளுக்கான தான பத்திரபதிவை ரத்து செய்ய வேண்டும் என்று கோரி ம.பி. உயர் நீதிமன்றத்தில் அந்த பெண் வழக்கு தொடுத்தார். அதை விசாரித்த உயர்நீதிமன்றம், "வயதான பெற்றோரை பிள்ளைகள் கவனிக்கவில்லை என்ற காரணத்துக்காக தான பத்திரத்தை (தான செட்டில்மென்ட்) ரத்து செய்ய முடியாது. மேலும், பிள்ளைகள் கவனிக்காவிட்டால், தானப்பத்திரம் செல்லாது என்று எந்த நிபந்தனையையும் மனுதாரர் விதிக்கவில்லை.
- எனவே தான, பத்திரத்தை ரத்து செய்ய முடியாது" என்று கூறி வழக்கை தள்ளுபடி செய்தது.
- இதை எதிர்த்து அந்தப் பெண் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அந்த மனு மீதான விசாரணை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சி.டி.ரவிக்குமார் மற்றும் சஞ்சய் கரோல் ஆகியோர் அடங்கிய அமர்வில் நடைபெற்று வந்தது.
- விசாரணை முடிந்து நீதிபதிகள் அளித்த தீர்ப்பில் கூறியதாவது:
- ம.பி. உயர் நீதிமன்றம் சட்டத்தின்படி மட்டுமே ஆய்ந்து தீர்ப்பு வழங்கி உள்ளது. ஆனால், மூத்த குடிமக்களின் உணர்வுகளைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் உள்ளது.
- சொத்துக்களை எழுதி கொடுத்த பிறகு பெற்றோரை பிள்ளைகள் கவனிக்காமல் போவது மிகவும் கவலை அளிக்கிறது.
- அப்படிப்பட்ட சூழ்நிலையில், பிள்ளைகள் கவனிக்காவிட்டால் "பெற்றோர் பராமரிப்பு மற்றும் நலவாழ்வு மற்றும் மூத்த குடிமக்கள் சட்டத்தின்படி", பிள்ளைகளுக்கு பெற்றோர் எழுதி கொடுத்த சொத்து ஆவணத்தை ரத்து செய்யலாம்.